**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 437 of 2012**

**Deposition of Witness P.W.1**

| | |
|---|---|
| **Name : பாபுகண்ணன்** | **Father/Husband's Name : பொய்யாமொழி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 28.10.2025.**

**A1 to A3 absent 317 Cr.P.C PFA. A4 died (C.A)**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது பழனி, காரமடையில் குடியிருந்து, போட்டோகிராபர் தொழில் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். கடந்த 27.03.2012ம் தேதி செவ்வாய்கிழமை காலை 8.30 மணிக்கு இடும்பன் கோவில் பைபாஸ் அருகே தற்காலிக டீ கடை பங்குனி உத்திரத்திற்காக வைத்திருந்த போது அங்கு வந்து போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் அதில் நானும், சிவக்குமார் என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம். போலிசார் வாகன திருட்டுக்காக சம்பவ இடத்தில் படம் வரைந்தார்கள். பார்வை மகஜர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

2. போலிசார் கேட்டுக்கொண்டதால் தான் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் போட்டோகிராபராக இருப்பதால் காவல் நிலையத்திற்கு அடிக்கடி சென்று வரும் பழக்கம் உள்ளது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் அப்போது நிறைய பேர் இருந்தார்கள் என்றால் சரிதான். எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் ஒரு கையொப்பம் செய்தேன். நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து விட்டு போலிசார் கேட்டுக்கொண்டதால்

**பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

M PONPANDI Digitally signed by M PONPANDI Date: 2025.10.28 18:23:48 +0530

**நீதித்துறை நடுவர்,**

**பழனி.**

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 437 of 2012**

**Deposition of Witness P.W.2**

| | |
|---|---|
| **Name : இக்பால்** | **Father/Husband's Name : அப்துல் கபூர்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 28.10.2025.**

**A1 to A3 absent 317 Cr.P.C PFA. A4 died (C.A)**

**<u>முதல் விசாரணை</u>**

**1. நான் தற்போது பெரியகடைவீதியில் குடியிருந்து, போட்டோ ஸ்டுடியோ வைத்து தொழில் செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் மதன் என்ற செல்வகுமார் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். தற்போது என்னிடம் காட்டப்படும் சதிஷ்குமார் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். தற்போது என்னிடம் காட்டப்படும் 27.03.2012 ம் தேதி 11.10 மணிக்கு உள்ள அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். கடந்த 2012ம் வருடம்,தேதி மாதம் ஞாபகமில்லை, நானும் எனது நண்பர் முகமது இகையா என்பவரும் VK மில்ஸ்க்கு ஒரு வேலையாக சென்றுவிட்டு பழனி மெயின் பைபாஸ் ரோட்டில் வந்து கொண்டிருந்த போது கொடைக்கானல் செல்லும் ரோட்டுக்கு அருகில் சார்பு ஆய்வாளர் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தார். அப்போது எங்கள் வாகனத்தையும் நிறுத்தினார்கள். நாங்கள் வாகன ஆவணத்தை உரிமத்தை காண்பித்தோம். எங்களுக்கு முன்பாக இரண்டு பேர் வந்த வேறொரு வாகனத்தை செக் பண்ணி கொண்டிருந்தார்கள்.அவர்களிடமிருந்து செயின் திருடு போனதாக வாங்கினார்கள் அதில் சாட்சிகளாக எங்களை கையொப்பம் செய்யச்சொன்னார்கள் கையொப்பம் செய்தோம். அவர்களில் ஒருவர் கையில் கத்தி வைத்திருந்தார். மதன் என்ற செல்வகுமார் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சதிஷ்குமார் என்பவரின்**

ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அத்தாட்சி அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2025.10.28 18:23:55 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.